# அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் - நோர்வே
## அன்னைத் தமிழ்முற்றப் போட்டி 25/26

2016 பிறந்தவர்கள் பின்வரும் 5 குறள்களை மட்டும் ஒப்பித்தல் செய்தல். குறள்களுக்கான பொருள் விளக்கம் கூறத்தேவையில்லை.

1. **அன்பின் வழியது உயிர்நிலை அ.ஃ.திலார்க்கு**
   **என்புதோல் போர்த்த உடம்பு.** (குறள் 80)

   அன்பை அடிப்படையாகக் கொண்டதே உயிர் உள்ள இந்த உடம்பு. அன்பு இல்லையென்றால் இந்த உடம்பு வெறும் எலும்பின் மேல் தோலைப் போர்த்தியது போன்றது ஆகும்.

2. **தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்**
   **கற்றனைத் தூறும் அறிவு.** (குறள் 396)

   மணல் உள்ள இடத்தில் கேணி தோண்டிய அளவிற்கேற்ப நீர் ஊறும். அதுபோல, மக்களுக்கு அவர்கள் கற்ற அளவுக்கேற்ப அறிவு பெருகும்.

3. **இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ**
   **வன்சொல் வழங்கு வது.** (குறள் 99)

   இனிய சொற்களையே பேச வேண்டும். கடுமையான சொற்களைத் தவிர்க்க வேண்டும்.

4. **செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்**
   **நல்விருந்து வானத் தவர்க்கு.** (குறள் 86)

   எமது வீட்டுக்கு வருவோரை அன்போடு வரவேற்க வேண்டும். அகத்தால் மிக மகிழ்ந்து அன்போடு உணவளிக்க வேண்டும்.

5. **கற்க கசடறக் கற்பவை கற்றபின்**
   **நிற்க அதற்குத் தக.** (குறள் 391)

   ஐயங்கள் ஏதுமின்றித் தெளிவாகக் கல்வி கற்க வேண்டும். கற்றதற்கு ஏற்ப, நாம் நடந்து கொள்ள வேண்டும்.

**வளாகங்களில் முதல் மூன்று நிலைகளையும் அடைந்த மாணவர்கள் அன்னைத் தமிழ்முற்றப் போட்டியில் பங்குபெறும் வாய்ப்பைப் பெறுவார்கள்.**

அனைத்து மாணவர்களுக்கும் இப்பிரதி வழங்கப்படுகிறது.மாணவர்களை ஊக்கப்படுத்துவது ஆசிரியர் கடமை. மாணவர்களை தயார்ப்படுத்துவது பெற்றோரினது கடமை